# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

**பலவகை உரிமங்கள் டெண்டர் / பொது ஏலம் அறிவிப்பு**

ந.க. எண் 5516 / 1431 / சி3 / நாள் 18.05.2022

**ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் பசலி 1432க்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய உள்ள காலத்திற்கு கீழ்க்கண்ட உரிமங்களின் ஏலம் மற்றும் டெண்டர் நடைபெறவுள்ளது.**

| | | |
|---|---|---|
| ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், டெண்டர் கொடுக்க கடைசி நாள் / நேரம் | 01.06.2022 | மாலை 4.00 மணி |
| பொது ஏலம் / டெண்டர் திறப்பு நடைபெறும் நாள் / நேரம் | 01.06.2022 | மாலை 4.30 மணி |
| பொது ஏலம் / டெண்டர் திறப்பு நடைபெறும் இடம் | அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவில், ஸ்ரீரங்கம் (ரெங்கவிலாச மண்டபம்) | |

| | | |
|---|---|---|
| | | டெபாசிட் தொகை வரைவோலை ₹. |
| 1. | ஸ்ரீபண்டாரம் பணியாரப்போடு சத்திரப்போடு பிரசாத ஸ்டால் உரிமம் | 75,00,000 |
| 2. | ஸ்ரீதாயார் சந்நிதி பூஜைப் பொருட்கள் விற்பனை செய்துகொள்ளும் உரிமம் | 10,00,000 |
| 3. | அம்மாமண்டபம் பூஜைப் பொருட்கள் விற்பனை செய்துகொள்ளும் உரிமம் | 15,00,000 |

டெண்டர் / பொது ஏலம் நிபந்தனைகளை அலுவலக நாட்களில் அலுவலக வேலை நேரங்களில் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம். மேலும் டெண்டர்/ஏலம் தொடர்பான விரிவான விபரங்களை www.srirangam.org மற்றும் www.tnhrce.org என்ற வலைதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

டெண்டர் படிவத்தின் விலை வரிசை எண் 1க்கு ₹.1000/- வரிசை எண் 2, 3க்கு ₹.500/- அலுவலகத்தில் செலுத்தி டெண்டர் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

**சீ. செல்வராஜ்,**
தக்கார் / இணை ஆணையர்

**செ. மாரிமுத்து,**
இணை ஆணையர் / செயல் அலுவலர்

# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

**<u>ஸ்ரீபண்டாரம், பணியாரப்போடு, சத்திரப்போடு மற்றும் பிரசாத ஸ்டால் உரிமம்</u>**

பசலி 1432 (01.07.2022 முதல் 30.06.2023 முடிய)

**<u>நிபந்தனைகள்</u>**

1. திருக்கோயில் பழக்க வழக்கத்திற்குட்பட்டு பிரசாதம் தயார் செய்யவும், மேற்படி பிரசாதம் தயார் செய்யும் இடத்திற்கு நேரில் சென்று மேற்பார்வை செய்ய திருக்கோயில் பழக்க வழக்கங்கள் நன்கறிந்தவர்கள் மட்டுமே இந்த ஏலத்தில் கலந்துகொள்ள தகுதியுடையர்களாவார்கள்.
2. பணியாரப்போடு குத்தகை என்பது இத்திருக்கோயிலில் பிரசாதங்கள் மற்றும் பணியாரங்கள் கீழ்க்கண்ட விபரப்படி பெரியபெருமாள், ஸ்ரீதாயார் மற்றும் ஸ்ரீ சக்கரத்தாழ்வார் மற்றும் ஸ்ரீசிங்கர் சன்னதிகளில் அமுது செய்தற்காக தயார் செய்வதாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | நிரவல் தோசை | ஒன்றுக்கு | கிராம் | 200 |
| 2 | ஆழ்வார் தோசை | ஒன்றுக்கு | கிராம் | 245 |
| 3 | அதிரசம் | ஒன்றுக்கு | கிராம் | 210 |
| 4 | திருமால் வடை | ஒன்றுக்கு | கிராம் | 315 |
| 5 | அப்பம் | ஒன்றுக்கு | கிராம் | 350 |
| 6 | ரொட்டி | ஒன்றுக்கு | கிராம் | 35 |
| 7 | தேன் குழல் | ஒன்றுக்கு | கிராம் | 210 |
| 8 | அரிசி வடை | ஒன்றுக்கு | கிராம் | 70 |
| 9 | வாகன வடை | ஒன்றுக்கு | கிராம் | 105 |
| 10 | ஏகாந்த வடை | ஒன்றுக்கு | கிராம் | 105 |
| 11 | செல்வரப்பம் | ஒன்றுக்கு | கிராம் | 105 |
| 12 | உருப்படி | ஒன்றுக்கு | கிராம் | 105 |

3. தேவஸ்தான சன்னதிகளில் நிவேதனம் (அமுது செய்யப்படாத பிரசாதங்களை) கீழே விவரித்துள்ளபடி இதற்காகவே தனியே கட்டப்பட்டுள்ள மடப்பள்ளியில் தயாரித்து கருட மண்டபத்தில் உள்ள பிரசாதக் கடையில் விற்பனை செய்யும் பணியாரப்போடு, குத்தகை உரிமதாரருக்கு உரிமை அளிக்கப்படும். அமுது செய்யப்பட்ட பணியாரங்கள், பிரசாதங்களையும் எக்காரணம் கொண்டும் ஸ்ரீ பண்டாரத்தை தவிர மற்ற இடங்களில் பிரசாத ஸ்டாலில் விற்பனை செய்யக்கூடாது. அமுது செய்யப்படாத பணியாரங்களை பிரசாத ஸ்டாலைத் தவிர வேறு எந்த இடங்களிலும் விற்பனை செய்யக்கூடாது. மேலும் எக்காரணம் கொண்டும் அதிகப்படியாக பிரசாதங்களை பணியாரப்போட்டில் தயார் செய்யக்கூடாது. ஸ்ரீபண்டாரத்தில் வைத்திருக்கும் மடப்பள்ளியில் தயார் செய்யப்பட்ட பணியாரங்களை எக்காரணம் கொண்டும் ஆர்யபடாள் வாயிலுக்குள் எடுத்துச் செல்லக்கூடாது. மேற்படி விபரங்களில் ஏதேனும் தவறுகள் நடந்து இருந்தால் உடன் திருக்கோயில் கணக்கில் வைத்து அதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் ஏலதாரர் மீது நடவடிக்கை

மேற்கொள்ளப்படும். மேலும், மேற்படி பிரசாத ஸ்டாலுக்காக அதிகப்படியாக செய்யப்படும் பிரசாதங்கள் அனைத்தும் சுத்தமாகவும், தரமான சாமான்களைக் கொண்டும், சுகாதார முறைப்படி தயார் செய்தும் முறைப்படி விற்பனை செய்யப்படவேண்டும். இதில் ஏதேனும் சுகாதாரக்கேடோ, மற்றும் தரக்கேடோ ஏற்பட்டால் உரிமதாரரே பொறுப்பாளியாவார். சுகாதார முறைகேடு நடந்தால் மேற்படி உரிமதாரரே பொறுப்பாளியாவார். ஆணையர் ஓ.மு. 17234 / 2017 / யு4 / நாள் 23.04.2017 உத்தரவின்படி பிரசாதங்களை உயர்த்திய விலையான கீழ்க்கண்ட விபரப்படி எடை குறைவு ஏற்படாமல் மேற்படி விலைக்கே விற்பனை செய்யயப்பட வேண்டும். கீழே குறிப்பிட்டுள்ள விலைக்கு மேல் விற்பனை செய்தால் உரிமம் ரத்து செய்யப்படும். மேற்படி பிரசாதங்கள் தயார் செய்ய வேண்டிய சாமான்கள் நெய், விறகு போன்ற வகைகளை உரிமதாரரே தன் சொந்தப் பொறுப்பில் வாங்கி கொள்ள வேண்டும்.

| வ.எண் | பிரசாத இனங்கள் | எடை | விற்பனை விலை |
|---|---|---|---|
| 1 | பெரிய திருமால் வடை –1 | 315 கிராம் | 30 |
| 2 | பெரிய அப்பம் –1 | 350 கிராம் | 30 |
| 3 | பெரிய தேன்குழல் –1 | 210 கிராம் | 30 |
| 4 | பெரிய அதிரசம் –1 | 210 கிராம் | 30 |
| 5 | வடை –1 | 50 கிராம் | 15 |
| 6 | தேன் குழல் –1 | 50 கிராம் | 15 |
| 7 | அதிரசம் –1 | 50 கிராம் | 15 |
| 8 | லட்டு –1 | 60 கிராம் | 20 |
| 9 | மைசூர் பாகு –1 | 40 கிராம் | 15 |
| 10 | ஜாங்கிரி –1 | 60 கிராம் | 15 |
| 11 | சர்க்கரை பொங்கல் | 100 கிராம் | 15 |
| 12 | வெண் பொங்கல் | 100 கிராம் | 15 |
| 13 | புளியோதரை | 100 கிராம் | 15 |
| 14 | தயிர்சாதம் | 100 கிராம் | 15 |
| | **நித்தியப்படி** | | |
| 15 | ஆழ்வார் தோசை | 245 கிராம் | 20 |
| 16 | ரொட்டி | 35 கிராம் | 5 |
| 17 | பாசிப்பருப்பு | 100 கிராம் | 5 |
| 18 | சாத்தமுது | 1 கலயம் | 15 |
| 19 | திருக்கண்ணமுது | 1 கலயம் | 20 |
| 20 | வடிசல் | 200 கிராம் | 15 |
| 21 | சீராண்ணம் | 100 கிராம் | 20 |
| 22 | புட்டு | 100 கிராம் | 20 |
| 23 | அரவனை | 105 கிராம் | 20 |
| | **விழாக்கால சிறப்பு நாட்கள்** | | |
| | **வெள்ளிகிழமைகளில்** | | |
| 24 | நிரவல் தோசை | 200 கிராம் | 15 |

| | | | |
|---|---|---|---|
| | **மாசி தெப்ப உற்சவம்** | | |
| 25 | அமிர்த கலசம் (கொழுக்கட்டை) | 60 கிராம் | 15 |
| 26 | அரிசி வடை | 70 கிராம் | 15 |
| 27 | வாகன வடை | 70 கிராம் | 15 |
| | **ஆனி திருப்பாவாடை** | | |
| 28 | ஏகாந்த வடை | 105 கிராம் | 15 |
| | **வைகுந்த ஏகாதசி** | | |
| 29 | சப்பார தோசை | 1 கிலோ 10 கிராம் | 240 |
| 30 | செல்வரப்பம் | 100 கிராம் | 15 |
| 31 | உருப்படி | 105 கிராம் | 10 |
| 32 | எள்ளு உருண்டை | 50 கிராம் | 15 |
| 33 | கடலை உருண்டை | 50 கிராம் | 15 |
| 34 | ஜீரா | 100 கிராம் | 20 |

இதைத்தவிர உற்சவங்கள், உபயங்கள் மற்றும் அதிகப்படி பிரசாதங்களுக்கு தேவஸ்தான உத்தரவுப்படி தயார் செய்யப்படும் பிரசாதங்களிலும் பத்துக்கு ஒன்று வீதம் பணிப்போர் பெற்றுக் கொள்ள உரிமை படைத்தவராவார். இவ்வாறு பெறப்படும் பிரசாதங்களை தேவஸ்தான ஸ்ரீபண்டாரத்தில் மட்டுமே விற்பனை செய்ய உரிமை உண்டு. மற்ற இடங்களிலும் அல்லது சந்ததிகளிலும் விற்பனை செய்ய உரிமை இல்லை. மேற்படி ஷரத்துக்கு முரண்பாடாக நடந்தால் மேற்படி குத்தகைதரரர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். தொடர்ந்து மேற்படி தவறையே திரும்ப திரும்ப செய்தால் குத்தகையினை ரத்து செய்யும் அதிகாரம் தேவஸ்தான நிர்வாக அதிகாரிக்கு உண்டு.

4. வர்க்க வகையில் செய்ய வேண்டிய ரொட்டி, வெண்ணை பிரசாதங்கள், திருப்பணியாரம், உள்ளூர் அறங்காவலர்கள், செயல் அலுவலர், ஸ்தலத்தார், உள்துறை கண்காணிப்பாளர்கள், கொட்டாரம் கணக்கர், ஆலயத்திற்கு சர்க்கார் அதிகாரிகள் இவர்களுக்கு கொண்டு போய் கொடுக்க உத்தரவு செய்தால் அவ்விதம் கொடுத்து வரவேண்டியது. தவறினால் தேவஸ்தானத்தில் ஆள் வைத்து அனுப்பி அதற்காகும் செலவுகளுக்கு இருமடங்கு குத்தகைதாரரிடம் வசூலிக்கப்படும். அபராதம் விதித்தால் அதையும் குத்தகைதாரர் செலுத்த வேண்டும் பணியாரப்போடிலும், தேவஸ்தான உத்தரவு செய்யும் வேறு இடங்களிலும் நித்யப்படி, அதிகப்படிகளில் திருப்பணியாரங்களை தயாரிக்க வேண்டியது.

5. அன்றாடம் நித்யப்படி அதிகப்படி பிரசாதங்கள் செய்தபின் மிச்சம் ஏற்படும் நெய்யை செலவு சம்பா (வடிசல்) தளிகை மேல் குத்தகைதாரர் கொண்டு வந்து சேர்த்துவிட வேண்டும். மறுநாள் உதயத்திற்குள் பணியாரப்போடில் இருக்கக்கூடாது. இருந்தால் தேவஸ்தானத்தில் ஆதாயமாக்கிக் கொள்ளப்படும். தவறினால் அபராதம் விதிக்கப்படும். பணிப்போர் தோசையை பெரியதாகப்

போடக்கூடாது. எல்லாம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். திருக்கோயில் வளாகத்திற்குள் பிற நபர்களிடம் தொகை பெற்றுக் கொண்டு அன்னதானம் வழங்குவது உள்ளிட்ட எந்த ஒரு ஒப்பந்தத்தில் கட்டுப்படாத நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று கண்டிப்பாக தெரிவிக்கப்படுகிறது.

6. குத்தகைதாரர் விடுப்பில் போக வேண்டி இருந்தாலும், வேறு காரணங்களினால் வரக்கூடாமலிருந்தாலும் செயல் அலுவலர் ஒப்புக்கொள்ளும் பதிலியின் பெயரில் முன் அனுமதி பெற்று விடுப்பில் போய்வரவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒரு ஆண்டிற்கு ஒரு மாதத்திற்கு மேல் விடுப்பு அனுமதிக்கப்படமாட்டாது.

7. நித்யப்படி மற்றும் அதிகப்படி முதலியவைகளுக்கு பிரதான ஆலயம், தாயார் சன்னதி, ஸ்ரீசக்கரத்தாழ்வார் மற்றும் ஸ்ரீசிங்கர் சன்னதி முதலியவைகளுக்கு பிரசாதம் தயார் செய்ய தேவைப்படும் அனைத்து எரிபொருட்களும் அந்தந்த திருக்கோயில்களுக்கு பணியாரப்போடு ஏலதாரரால் முன்கூட்டியே காய்ந்த எரிதுரும்பு முன்னதாக வழங்கப்படவேண்டும். சிங்கர் சன்னதிக்கு ஒரு வாரத்திற்கு தேவையான எரிதுரும்பு வழங்கப்பட வேண்டும். எரிதுரும்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு அதனால் பூஜா காலங்கள் தாமதமானால் அதனால் திருக்கோயிலுக்கு ஏற்படும் செலவிற்கு நஷ்டத்திற்கு மேற்படி உரிமதாரரே பொறுப்பாளியாவார். பணியாரப்போடுக்கும் மற்றும் திருமடப்பள்ளிக்கும் உபயோகப்படுத்தப்படும் எரிதுரும்புகளுக்கு தேவஸ்தானத் தாரரிடமிருந்து தொகை ஏதும் கேட்கக்கூடாது.

8. குத்தகைதாரர் அன்றாடம் பிரசாதம் தயார் செய்யும் இடத்தினை சுத்தமாக மெழுகியும், சாம்பல், குப்பை, சத்தை முதலியவைகளையும் அப்புறப்படுத்திவிட வேண்டும். உரல், குழவி, மரத்தொட்டி முதலியவைகளையும் கிணறு முதலியவைகளையும் நன்றாக அலம்பி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி இல்லாதிருந்தால் தேவஸ்தானத்தில் ஆள் வைத்து வேலைகளை நடத்தி அதற்காகும் கூலி வகைகளுக்கு இருமடங்கு தொகையை குத்தகைதாரரிடமிருந்து வசூலிக்கப்படும். நஷ்டத்திற்கும் பாத்தியப்பட வேண்டும்.

9. ஸ்ரீபண்டாரத்தில் விற்பனைக்கு வரும் பிரசாதங்கள் தேவஸ்தானத்தில் கொடுக்கப்படும் சாமான்களைக் கொண்டே திட்டப்படி தயாரிக்கப்பட வேண்டும். அதிகப்படியாக தேவஸ்தான அனுமதியோடு தயாரிக்கப்படும் பிரசாதங்களையும், தேவையான சாமான்கள் தேவஸ்தானத்திலேயே பெற்றுக் கொண்டு சுத்தமாக கலப்படம் இல்லாமலும் பார்த்து தயாரித்து விற்பனை செய்ய வேண்டும். அப்படி தயார் செய்தால் கலப்படம் ஏற்பட்டு அதனால் தேவஸ்தானத்திற்கு அவதுhறு ஏற்பட்டாலோ அல்லது நஷ்டம் ஏற்பட்டாலோ

பணியாரம் குத்தகைதாரரும், ஸ்ரீ பண்டாரம் பிரசாதம் விற்பனையாளரும் பொறுப்பாளியாவார்கள். ஒப்பந்தக்காரர் தனது பொறுப்பிலேயே அரிசி பெற்று வரவு வைத்து, இடித்து அதற்கான கணக்கு வைத்துக் கொண்டு சரியாக கவனித்து திட்டப்படி செலவுகள் செய்துவிட்டு, பணியாரப்போட்டிற்கு ஏற்பட்ட மாவை எடுத்துச் செல்ல வேண்டும்.

10. ஸ்ரீ நம்பெருமாள் வைகுந்த ஏகாதசி சாற்றுமறை அன்றும் ஸ்ரீரங்கநாச்சியார் சாற்றுமறை அன்றும் மண்டபத்தில் திருப்பணியாரங்களை ஒப்பந்தக்காரர் தன் சொந்தப் பொறுப்பில் திட்டப்படி கொடுக்க வேண்டும். மற்றவை பொது விகிதப்படி நடந்து வர வேண்டும்.

11. பணியாரப்போடு குத்தகைதாரர் கீழ்க்கண்ட விபரப்படி தேவஸ்தானத்தில் அமுது செய்து பிரசாதங்களையும் பெற்றுக்கொண்டு அவைகளை தேவஸ்தானத்தில் தேவஸ்தானத்தாரால் நிர்ணயிக்கும் விலைக்கு ஸ்ரீபண்டாரத்தில் விற்பனை செய்ய உரிமை உடையவராவார்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வெண் பொங்கல் (சேர்வைப்பொங்கல்) | 1 ½ மாகாணி | ஒன்றுக்கு | 2.00 |
| 2 | தோசை | 13 ½ | ஒன்றுக்கு | 1.00 |
| 3 | ரொட்டி | 2 ஓடு | ஒன்றுக்கு | 1.00 |
| 4 | பாசிப்பருப்பு | 2 ஓடு | ஒன்றுக்கு | 1.00 |
| 5 | வெண்ணை | 2 கலயம் | ஒன்றுக்கு | 1.00 |
| 6 | சாத்தமுது | 2 கலயம் | ஒன்றுக்கு | 0.50 |
| 7 | திருக்கண்ணமுது | ½ மாகாணி | ஒன்றுக்கு | 3.00 |
| 8 | பெரிய அவசரம் வடிசல் | 5 | ஒன்றுக்கு | 1.00 |
| 9 | ஊறுகாய் | 13 ½ | ஒன்றுக்கு | 0.50 |
| 10 | திருமால்வடை | 4 ½ | ஒன்றுக்கு | 9.00 |
| 11 | அப்பம் | 4 ½ | ஒன்றுக்கு | 9.00 |
| 12 | தேன்குழல் | 12 | ஒன்றுக்கு | 9.00 |
| 13 | சீராண்ணம் | ¼ மாகாணி | ஒன்றுக்கு | 2.00 |
| 14 | புட்டு | 7 மாகாணி | ஒன்றுக்கு | 5.00 |
| 15 | அரவணை | 10 மாகாணி | ஒன்றுக்கு | 9.00 |
| 16 | செலசம்பா (வடிசல்) | 3 மாகாணி | ஒன்றுக்கு | 3.00 |
| 17 | நிரவல் தோசை | | ஒன்றுக்கு | 1.00 |
| 18 | ஆழ்வார் தோசை | | ஒன்றுக்கு | 1.00 |
| 19 | அரிசி வடை | | ஒன்றுக்கு | 3.00 |
| 20 | வாகன வடை | | ஒன்றுக்கு | 3.00 |
| 21 | செல்வரப்பம் | | ஒன்றுக்கு | 1.00 |
| 22 | ஏகாந்தம் வடை | | ஒன்றுக்கு | 2.00 |
| 23 | உருப்படி | | ஒன்றுக்கு | 1.00 |
| 24 | அதிரசம் | | ஒன்றுக்கு | 6.00 |

12. சேவார்த்திகளுக்கு பிரசாத விற்பனை செய்யும் இடத்தில் குடிநீர் வசதி உரிமதாரர் சொந்தச் செலவில் செய்து கொடுக்க வேண்டும். மேலும் சேவார்த்திகள் பிரசாதம் உண்ட பிறகு கைகளை சுத்தம் செய்து கொள்ள உரிமதாரர்கள் சொந்த செலவில் வசதிகள் செய்துதர வேண்டும்.

13. இந்த ஏல உரிமதாரர் கருட மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரசாத ஸ்டால், மடப்பள்ளி ஆகியவைகளுக்கு தன் சொந்த மின்சார செலவில் சப் மீட்டர் பொருத்திக் கொண்டு அதற்காகும் மின் செலவினை திருக்கோயிலில் செலுத்த வேண்டும்.

14. மேற்படி உரிமதாரர் உதவியாளர்கள் பட்டியல் கொடுத்து முன் அனுமதி பெற்றே பணியமர்த்த வேண்டும். உரிமதாரர் மற்றும் உதவியாளர்கள் தொற்று நோய் உள்ளவர்களாக இருக்கக்கூடாது.

15. பிரசாத விற்பனை நிலையம் ஏலம் எடுப்பவர் பிரசாத ஸ்டாலில் விற்பனையாகும் பிரசாதங்கள் அனைத்தும் திருக்கோயில் அலுவலகத்திற்கு தினமும் ஒரு செட் வழங்க வேண்டும்.

16. ஷீராண்ணத்துடன் அமுது செய்விக்கப்படும் அப்பம், வடை, தேன்குழல் பிரசாதங்களில் முக்கியப் பிரமுகர்களுக்கு வழங்க அவசியம் ஏற்படும் போது மாதம் ஒன்றுக்கு 10 செட்டுக்கு மிகாமல் கேட்கும்போது கொடுக்க வேண்டும். இதற்காக தனியே தொகை ஏதும் கொடுக்கப்படமாட்டாது. நித்ய ஆராதனைக் கட்டளைதாரர்களுக்கு வழங்கக் கோரும் பிரசாத வகைகளை தவறாது கொடுக்க வேண்டும். பிரசாத வகைகளுக்கு 50 சதவிகித தொகை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும். உபரி பிரசாதங்களுக்கு திருக்கொட்டாரத்திலிருந்து தேவையான பொருட்கள் கூடுதலாக வழங்கினால் அதற்கு தொகை ஏதும் கேட்கக் கூடாது. மேற்கண்ட நிபந்தனைகளில் ஏதும் சந்தேகங்கள் ஏற்படின் இணை ஆணையர் / செயல் அலுவலர் விளக்கத்தையும் முடிவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நித்திய ஆராதனை கட்டளைதாரர்கள் வரவில்லை எனில் பிரசாத வகைகளை விற்பனைக்கு எடுத்துக் கொண்டு செலவினை நேர் செய்ய வேண்டும்.

17. மேற்படி உரிமத்தினை ஏலம் எடுப்பவர், இத்திருக்கோயிலின் உபதிருக்கோயிலான உறையூர் அருள்மிகு கமலவல்லி நாச்சியார் திருக்கோயிலுக்குத் தேவையான எரிதுரும்புகளையும் திருக்கோயில் சட்டப்படி திருக்கோயிலில் நேரடியாக சப்ளை செய்ய வேண்டும்.

18. ஆணையர் மூ.மூ.47747 / 96 / வி2 / நாள் 26.11.1996ன்படி திருக்கோயிலால் குறிப்பிட்டுள்ள இடத்தில் மட்டுமே பிரசாதங்கள் வைத்து விற்பனை செய்யப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட இடத்தினை தவிர வேறு இடங்களில் கூடுதலாக பிரசாத கடைகள் வைத்து விற்பனை செய்யப்பட்டால் உரிமம் உடனடியாக ரத்து செய்ய நடவடிக்கை எடுத்து மறு ஏலம் விடப்படும்.

19. இத்திருக்கோயிலின் கருட மண்டபத்தில் உள்ள வாகன மண்டபத்தின் வடபுறம் கடைசியில் 15 அடி நிளமும் 13 அடி அகலமும் உள்ள இடத்தில் நகரும் வசதியுடன் கூடிய பிரசாத ஸ்டால் மற்றும் அதன் அருகில் கிழமேலாக 8 அடி நீளமும், 2நூ அடி அகலமும் உள்ள பெட்டியும் கண்ணாடி முகப்புடன் கூடிய சுகாதார குறைவில்லாது வைக்க அனுமதிக்கப்படும். மடப்பள்ளியிலிருந்து எடுத்து வரும் சாம்பலை அன்றாடம் ஆர்யபடாள் வாயிலுக்கு வெளியே அப்புறப்படுத்திவிட வேண்டும்.

20. இதைத் தவிர கூடுதலாக இடத்தில் பிரசாதங்கள் வைக்கக் கூடாது. வருடாந்திர திருவிழா மற்றும் இதர உற்சவ காலங்களிலும் அல்லது சாதாரண நாட்களிலும் கூட தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பக்தர்களின் வசதிக்காக கூடுதலாக பிரசாத கடைகள் வைத்து நடத்த வேண்டிய அவசியம் இருப்பினும் அது குறித்து முன்னதாக விண்ணப்பித்து உரிய முன் அனுமதி பெற்று இதற்கென நிர்ணயிக்கப்படும் தொகையினை செலுத்தி நடத்திக் கொள்ள வேண்டியது.

21. தலத்தார்களுக்கு ஏற்பட்ட பிரசாதங்களை வாங்கி விற்பனை செய்யக்கூடாது. திருக்கோயிலுக்குள் ஒருமாத கால பிரசாத தயாரிப்பிற்கான விறகுகளை மட்டுமே இருப்பு வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்படும். இதனையும் உரிய காப்பீடு செய்தும், தீயணைப்புத் துறையினரின் ஆலோசனைப்படியான உரிய நடவடிக்கைகளையும் உரிய அளவிலான தீயணைப்பு கருவிகளையும் ஏலதாரர் தனது சொந்தப் பொறுப்பிலும் செலவிலும் வைத்துக்கொள்ள வேண்டும்.

22. **டெண்டர் – ஏலம் உறுதியான நபர் ஏலத் தொகை முழுவதையும் ஏல தினத்தன்றே தவறாது செலுத்திவிட வேண்டும். இதில் எவ்வித கால அவகாசமும் வழங்கப்படமாட்டாது.**

23. திருக்கோயிலுக்கு குத்தகை பாக்கி செலுத்தாதவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் மேற்படி ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதியில்லை.

24. பிரசாதம் விற்பனை செய்யும் இடங்களில் சுற்றுப்புற மண்டபங்களில் சேவார்த்திகள் அமர்ந்து பிரசாதங்களைச் சாப்பிடுவதால் அதிக அளவில் குப்பைகள் வருகிறது. எனவே, இரண்டு ஷிப்டுகளுக்கு தலா மூன்று நபர்களை மண்டபம் சுத்தம் செய்திட நியமனம் செய்து அந்தப் பகுதி முழுவதுமாக சுத்தம், சுகாதாரம் பேணிக் காத்திட வேண்டும்.

25. டெண்டர் மற்றும் பொது ஏலம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் நிபந்தனைக்கும் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டது.

26. உரிமதாரர் கடைகளில் தீயணைப்பான் கருவி பொருத்தி பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

27. கடைகளில் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தக்கூடாது.

28. பிரசாதங்கள் தயார் செய்யப்படும் மற்றும் விற்பனை செய்யும் இடங்களில் தீ தடுப்பு உபகரணங்கள் போதிய அளவில் பொருத்தி வைக்க வேண்டும்.

29. பிரசாதங்கள் உணவு பாதுகாப்புத்துறை நிபந்தனைகளின்படி தயார் செய்து விற்பனை செய்யப்பட வேண்டும்.

30. பிரசாதங்கள் விற்பனை செய்யப்படும் இடங்களில் ஈ, கொசு மெய்க்காதவாறு உரிய உபகரணங்கள் பொருத்தி வைக்க வேண்டும்.

31. பிரசாதம் தயார் செய்யும், விற்பனை செய்யும் இடத்தில் கையுறை, தலை உறை அளித்து பணியாளர்கள் பணிபுரிய வேண்டும்.

32. அனைத்து நபர்களுக்கு உரிய காப்பீடு செய்யப்பட வேண்டும்.

33. ஏல / டெண்டர் நிபந்தனைகளின்படி ₹.20/– க்கான அரசு முத்திரைத்தாளில் ஒப்பந்த பத்திரம் எழுதித் தரப்பட வேண்டும்.

34. டொபசிட் தொகை வங்கி வரைவோலையாக இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் என்ற பெயரில் மாற்றும் வகையில் இருக்க வேண்டும்.

35. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நாட்களில், வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

## <u>கூடுதல் நிபந்தனைகள்</u>

36. பிரசாதங்கள் தயாரிப்பில் முன் அனுபவம் பெற்று வைஷ்ணவ திருக்கோயிலில் குறைந்தது 5 வருடங்கள் பிரசாத கடை நடத்தியத்திற்கான முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அதற்கான ஆதாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

37. பிரசாத கடை டெண்டர் எடுப்பவர்கள் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு வருமான வரி தாக்கல் செய்யப்பட்டதற்கான சான்று பட்டயராதரிடம் (ஆடிட்டர்) பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

38. உணவு மற்றும் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையில் FSSAI ல் பதிவு பெற்று அதற்கான பதிவு சான்று இணைக்கப்பட வேண்டும்.

39. ஜி.எஸ்.டி பதிவு பெற்றவராக இருக்க வேண்டும். அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும். ஏலம் எடுத்தவர் ஏலத்தொகையில் ஒரு சதவீதம் TCS தொகை செலுத்த வேண்டும்.

40. வரிசை எண். 36 முதல் 39 வரையிலான சான்றுகளை ஏலம் / டெண்டருக்கு முன்தினம் மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பித்து படிவத்தொகை ரூ.1000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) செலுத்தி ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

41. ஏலத்தில் டெபாசிட் தொகை செலுத்தி ஏலம் கேட்க விரும்பவர்கள் வரிசை எண். 36–39ல் குறிப்பிட்டுள்ள சான்று நகலுடன் டெபாசிட்டை செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

42. உரிமம்தாரர் மூலம் நியமனம் செய்யப்பட்டு பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் உரிமதாரர் தனது சொந்த பொறுப்பில் விபத்து காப்பீடு செய்ய வேண்டும்.

43. மேற்கண்ட பணியாளர்களுக்கு பாதிப்பு ஏதேனும் ஏற்பட்டால் உரிமதாரர் தனது சொந்த பொறுப்பில் இழப்பீடு வழங்க வேண்டும். எக்காரணத்தை கொண்டும் திருக்கோயிலால் இழப்பீட்டு தொகை ஏதும் வழங்கப்பட மாட்டாது.

44. ஏலம் / டெண்டர் நிபந்தனைகளை மேலும் கூட்டவோ, குறைக்கவோ, திருத்தவோ, நீக்கவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு அதிகாரமுள்ளது.

– திருக்கோயில் நிர்வாகம்